www.Padasalai.Net www.CBSEtips.in

# லொயோலா
# ஈஸி சமூக அறிவியல்
## எளிய துணைவன்




**சிறப்புகள்:**

1. புதிய பாடத்திட்டத்தின்படி
2. அரசு விடைக்குறிப்பு (Key) அடிப்படையில்
3. மெல்ல கற்கும் மாணவர்களுக்கு சிறப்பு வினா-விடைகள் (Minimum Material)
4. GMQ, PTA & அரசுத்தேர்வு வினாக்களுக்கான விடைகள்

LESS STRAIN... SCORE MORE... LOYOLA PUBLICATION, TIRUNELVELI. LP

1-23

முதன்மை புத்தகம் + வரைபட பயிற்சி புத்தகம் - ₹. 225/-

**Less Strain Score More**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

லொயோலா

# ஈசி சமூக அறிவியல்

# 10

எளிய துணைவன்

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி விடைக் குறிப்பு (Key) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்.

**மெல்ல கற்கும் மாணவர்களுக்கு**
(Slow Learners)
Minimum Material **கொடுக்கப்பட்டுள்ளது**

முதன்மை புத்தகம் + இலவச வரைபட பயிற்சி புத்தகம் ₹.225/-

*Less Strain Score More* ★★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

**Published by**

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

www.Padasalai.Net

**Author:**

**Mr. D. Koilmani, M.A., M.Ed.,**
Former Asst. Head Master,
St. John's Hr. Sec. School, Palayamkottai.

Loyola Publications
Vivek Illam, No. 19, Raj Nagar, N.G.O. 'A' Colony,
Palayamkottai, Tirunelveli - 627 007.
Ph: 0462 - 2553186
Cell : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# நூலின் புகுமுன்

அன்புநிறை தம்பியரே! தங்கையரே!

வாழ்த்துகள்,

- 10 ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடம் கடினமானது. இதை எளிமையாக்கும் பொருட்டு அரசு பொதுத்தேர்வில் விடைத்தாள்கள் திருத்தப்படும் (Key) முறை, பாடத்தை எளிமையாகப் படிக்கும் முறை, வினாக்களுக்கு மிகச் சரியான விடை அளிக்கும் முறையில், விடைகள் அனைத்தும் மிக எளிமையாக மாணவ, மாணவிகள் எளிதில் புரியும் வண்ணம் (Point by Point) அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.
- ஒரு மதிப்பெண் வினாக்கள் கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளன.
- கூடுதல் வினாக்களாக 2, 5 மதிப்பெண் வினா-விடைகள் மற்றும் காலக்கோடு கொடுக்கப்பட்டுள்ளன.
- கூடுதலான வரைபடங்களுடன் வரைபடப் பயிற்சிப் புத்தகம் இலவசமாகக் கொடுத்துள்ளோம்.
- **10ஆம் வகுப்பு ஈசி சமூக அறிவியல்** புத்தகத்தை நன்கு புரிந்து முழுமையாகப் படித்தால் அரசுத்தேர்வை எவ்வித அச்சமுமின்றி எதிர்கொண்டு உயர் மதிப்பெண் பெறலாம்.

நன்றி!

அன்புடன்

**லொயோலா பப்ளிகேசன்.**

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| அலகு | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1 | முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும் | 5 |
| 2 | இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம் | 12 |
| 3 | இரண்டாம் உலகப்போர் | 20 |
| 4 | இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம் | 27 |
| 5 | 19ஆம் நூற்றாண்டில் சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள் | 33 |
| 6 | ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்க கால கிளர்ச்சிகள் | 40 |
| 7 | காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும் | 48 |
| 8 | தேசியம் : காந்திய காலகட்டம் | 55 |
| 9 | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் | 63 |
| 10 | தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் | 70 |
| | **புவியியல்** | |
| 1 | இந்தியா - அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு | 78 |
| 2 | இந்தியா - காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் | 86 |
| 3 | இந்தியா - வேளாண்மை | 94 |
| 4 | இந்தியா - வளங்கள் மற்றும் தொழிலகங்கள் | 104 |
| 5 | இந்தியா - மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம் | 111 |
| 6 | தமிழ்நாடு - இயற்கைப் பிரிவுகள் | 118 |
| 7 | தமிழ்நாடு - மானுடப் புவியியல் | 125 |
| | **குடிமையியல்** | |
| 1 | இந்திய அரசியலமைப்பு | 134 |
| 2 | நடுவண் அரசு | 141 |
| 3 | மாநில அரசு | 147 |
| 4 | இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை | 153 |
| 5 | இந்தியாவின் சர்வதேச உறவுகள் | 159 |
| | **பொருளியல்** | |
| 1 | மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம் | 165 |
| 2 | உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் | 173 |
| 3 | உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து | 179 |
| 4 | அரசாங்கமும் வரிகளும் | 186 |
| 5 | தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள் | 192 |
| | **அரசு பொதுத் தேர்வு வினாத்தாள் - ஏப்ரல் 2023** | 198 |


www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

வரலாறு

அலகு 1

# முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. **முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?**
அ) ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, உதுமானியர்
ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, ரஷ்யா
இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, இத்தாலி
**விடை: அ) ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, உதுமானியர்**

2. **பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?**
அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா
**விடை: ஆ) ஜப்பான்**

3. **"ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்" எனக் கூறியவர் யார்?** PTA - 6 மே-2022
அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்
**விடை: அ) லெனின்**

4. **மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?**
அ) ஆகாயப் போர்முறை ஆ) பதுங்குக் குழிப்போர்முறை
இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை
**விடை: ஆ) பதுங்குக் குழிப்போர்முறை**

5. **பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**
அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ்
இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
**விடை: அ) பிரிட்டன்**

6. **பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?**
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ் செப் -2021
**விடை: ஆ) ரஷ்யா**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|
| 1. ________ ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது. | 1894 |
| 2. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ________உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதியநாடு உருவாக்கப்பட்டது. மே-2022 | லண்டன் |
| 3. ____ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது | 1902 |
| 4. பால்கனில் ________ நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது. | மாசிடோனியா |
| 5. டானென்பர்க் போரில் ________ பேரிழப்புகளுக்கு உள்ளானது. ஏப்ரல்-2023 | ரஷ்யா |
| 6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் _____ ஆவார். | கிளமென்சோ |
| 7. ______ ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. ஆகஸ்ட் 2022 PTA 1 | 1925 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

**1. i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது**
**ii) துருக்கி மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.**
**iii) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது**

அ) i), ii) ஆகியன சரி ஆ) i), iii) ஆகியன சரி
இ) ii) iii) ஆகியன சரி ஈ) i), ii), iii) ஆகியன சரி

**விடை: ஈ) i), ii), iii) ஆகியன சரி**

**2. கூற்று** : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.
**காரணம்** : சொந்தநாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.

அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு. ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு

**விடை: அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி**

## IV. பொருத்துக

| | I | | II | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | பிரெஸ்ட் - லிடோவஸ்க் உடன்படிக்கை | அ | வெர்செய்ல்ஸ் | இ | ரஷ்யாவும் ஜெர்மனியும் |
| 2 | ஜிங்கோயிசம் | ஆ | துருக்கி | ஈ | இங்கிலாந்து |
| 3 | கமால் பாட்சா | இ | ரஷ்யாவும் ஜெர்மனியும் | ஆ | துருக்கி |
| 4 | எம்டன் | ஈ | இங்கிலாந்து | உ | சென்னை |
| 5 | கண்ணாடி மாளிகை | உ | சென்னை | அ | வெர்செய்ல்ஸ் |

## V. சுருக்கமாக விடையளிக்கவும்

**1. சீன - ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**

- **1894இல்** ஜப்பான் சீனாவின் மீது வலுக்கட்டாயமான ஒரு போரை மேற்கொண்டது.
- **1894 - 1895ல்** நடைபெற்ற இச் சீன - ஜப்பானியப்போரில் சீனாவை சிறிய நாடான **ஜப்பான் தோற்கடித்தது உலகை வியக்க வைத்தது.**
- தொடர்ந்து ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி **ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது.** இதன் மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

**2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.** ஆகஸ்ட் 2022 QY - 2019 HY - 2019

- இங்கிலாந்து
- பிரான்ஸ்
- ரஷ்யா

**3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?** PTA - 1 HY - 2019

- இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று (Jingoism)
- பிரான்சின் அதி தீவிரப்பற்று (Chauvinism)
- ஜெர்மனியின் வெறி கொண்ட நாட்டுப்பற்று (Kultur)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. **பதுங்குக் குழிப்போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?** செப் -2021 PTA - 3 ஏப்ரல்-2023

- போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் **எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களைக் காத்துக் கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவின.**
- பிரதான பதுங்குக் குழிகள் **ஒன்றோடொன்றும்** பின்புறமுள்ள குழிகளோடும் **இணைக்கப்பட்டிருக்கும்.**
- அவற்றின் வழியாக **உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்து சேரும்.** புதிய வீரர்களும் வந்து சேர்வர்.

5. **முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?**

- **துருக்கி** மீண்டும் ஒரு **நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சா முக்கியப் பங்கு** வகித்தார்.
- துருக்கிக்கு விடுதலை பெற்றுத் தந்ததோடு, **அந்நாட்டை நவீனமயமாக்கி** அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்தும் மாற்றியமைத்தார்.

6. **பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.** PTA - 5

- பன்னாட்டுச் சங்கம் முதல் உலகப் போரில் **வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.**
- **சங்கத்திற்கென்று ராணுவம் இல்லை** என்பதால் சங்கத்தால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த இயலவில்லை.

## VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்

1. **முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.** PTA - 1 செப் -2020 செப் -2021 மே-2022

**ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிர் அணி சேர்க்கைகளும்:**

- ஐரோப்பிய வல்லரசுகள் **இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.**
- ஒரு முகாம் மையநாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரியா - ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது, இவை 1882இல் **மூவர் உடன்படிக்கையை** மேற்கொண்டன.
- இதற்கு எதிராக இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா ஆகியவை **மூவர் கூட்டு என்ற உடன்படிக்கை** செய்து கொண்டன.
- **இவ்விரு அணிகளுக்கிடையே பகைமையும் எதிர்ப்பும் தோன்றின.**

**வன்முறை சார்ந்த தேசியம்:**

- தேசப்பற்றின் வளர்ச்சியோடு “எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்” என்ற மனப்பான்மை வளர்ந்தது.
- இங்கிலாந்தின் **ஆரவாரமான நாட்டுப்பற்று** (Jingoism), பிரான்சின் **அதிதீவிரப்பற்று** (Chauvinism), ஜெர்மனியின் **வெறி கொண்ட நாட்டுப்பற்று** (Kultur) ஆகிய அனைத்தும் போர் ஏற்பட முக்கியக் காரணங்களாயின.

**ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்போங்கு:**

- **பேரரசர் கெய்சர் வில்லியம்,** ஜெர்மனியே உலகத்தின் தலைவன் என்று பிரகடனம் செய்தார்.
- ஜெர்மனியின் கப்பற்படை விரிவாக்கம் செய்யப்பட்டது. இது தனக்கு எதிரானது என்ற இங்கிலாந்தின் முடிவு **இங்கிலாந்தையும் விரிவாக்கப் போட்டியில் ஈடுபடுத்தியது.** இரு நாடுகளுக்கிடையே பதற்றம் மேலும் அதிகரித்தது.

**பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை:**

- பிரான்சும், ஜெர்மனியும் பழைய பகைவர்களாவர்.
- 1871இல் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்ட பிரான்ஸ் ஜெர்மனியிடம் **அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை இழந்தது.** இது பிரான்ஸ் மக்களிடையே கசப்பான உணர்வை ஏற்படுத்தியது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீடு இக்கசப்புணர்வை அதிகரித்தது.

**பால்கன் போர்கள்:**

- துருக்கியப் பேரரசின் உறுதியற்ற அரசியல் பொருளாதாரச் சூழலை சாதகமாகக் கொண்டு கிரீசும் பிறநாடுகளும் துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிக் கொண்டன.
- பால்கன் கழகம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.
- **இக்கழகம் துருக்கியப் படைகளைத் தோற்கடித்தது.**
- **முதல் பால்கன் போர் லண்டன் உடன்படிக்கையோடு முடிவுக்கு வந்தது.** அல்பேனியா எனும் நாடு உருவாக்கப்பட்டது.
- அதன்பின் ஏற்பட்ட **இரண்டாம் பால்கன் போர் புகாரெஸ்ட் உடன்படிக்கை** மூலம் முடிவுக்கு வந்தது.

**உடனடிக்காரணம்:**

- 1914 ஜுன் 28ஆம் நாள் ஆஸ்திரியப் பேரரசரின் மகனும் வாரிசுமான **பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் என்ற பாஸ்னிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.**
- ஆஸ்திரியா இதனை செர்பியாவைக் கைப்பற்ற ஒரு வாய்ப்பாகக் கருதியது.
- செர்பியாவுக்கு ஆதரவாக ரஷ்யா போரில் இறங்கும் எனக் கருதிய ஜெர்மனி ரஷ்யாவின் மீது தாக்குதல் நடத்தியது,
- **பெல்ஜியத்தின் நடுநிலைமை பாதிக்கப்பட்டதால் இங்கிலாந்தும் போரில் இறங்கியது**, முதல் உலகப்போர் ஆரம்பமானது.

---

**2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.** **PTA - 2**

- போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி **இழப்பீடு வழங்க வேண்டும்** என வலியுறுத்தப்பட்டது.
- மையநாடுகள் அனைத்தும் போர் இழப்பீட்டுத் தொகையை வழங்கவும் வலியுறுத்தப்பட்டன.
- **ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது.**
- **சிறிய கப்பற்படை**யொன்றை மட்டுமே வைத்துக் கொள்ள ஜெர்மனி அனுமதிக்கப்பட்டது.
- ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் **ஒருங்கிணைப்பு தடைசெய்யப்பட்டது.**
- **ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு** நாடுகளாக ஆக்கப்பட்டன.
- ரஷ்யாவுடன் செய்து கொள்ளப்பட்ட **பிரெஸ்ட் - லிடோவஸ்க் உடன்படிக்கையையும், பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கை**யையும் திரும்பப் பெற்றுக் கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.
- **அல்சேஸ்-லொரைன்** பகுதிகள் **பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.**
- **போலந்து** மீண்டும் உருவாக்கப்பட்டது.
- **நேச நாடுகளின்** ஆக்கிரமிப்பின் கீழ் **ரைன்லாந்து** இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

---

**3. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கினை விளக்குக.**

- சோவியத்துகளில் **மென்ஷ்விக்குகள் ஆதிக்கம்** செலுத்த, **சிறுபான்மையினரான போல்ஷ்விக்குகள்** அச்சமுற்றவர்களாகவும் முடிவெடுக்க இயலாதவர்களாகவும் இருந்தனர். **லெனினின்** வருகையால் இச்சூழ்நிலை மாறியது.

**தற்காலிக அரசின் தோல்வி:**

- புரட்சியின் போது **''அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே''** என்ற லெனினின் முழுக்கம் தொழிலாளர்களையும் தலைவர்களையும் வென்றெடுத்தது. துயரங்களுக்கு உள்ளாகியிருந்த மக்கள் **''ரொட்டி, அமைதி, நிலம்''** என்ற முழக்கத்தால் கவரப்பட்டனர்.
- தற்காலிக அரசு இரண்டு முக்கியத் தவறுகளைச் செய்தது.
    i) ஒன்று நிலங்களின் மறுவிநியோகம் குறித்த கோரிக்கையின் மீது எடுக்கப்படவேண்டிய முடிவைத் தள்ளிவைத்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ii) மற்றொன்று போரைத் தொடர்வதென எடுக்கப்பட்ட முடிவு. இதனால் ஏமாற்றமடைந்த விவசாய இராணுவ வீரர்கள் தங்கள் பொறுப்புகளைக் கைவிட்டு நில அபகரிப்பில் ஈடுபடலாயினர். இது பெட்ரோகிரேடில் போல்ஷ்விக்குகளின் தலைமையில் நடைபெற்ற எழுச்சியை மேலும் தீவிரப்படுத்தியது. **''பிராவ்தா''-வை தடைசெய்து** போல்ஷ்விக்குகளைக் கைது செய்தது.

- **டிராட்ஸ்கியும் கைது செய்யப்பட்டார்.**

**லெனின் தலைமையில் போல்ஸ்விக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுதல்:**

- அக்டோபர் திங்களில், லெனின் போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் குழுவை **உடனடிப்புரட்சி** குறித்து முடிவு செய்யக் கேட்டுக் கொண்டார்.
- டிராட்ஸ்கி ஒரு **விரிவான திட்டத்தைத் தயாரித்தார்.**
- நவம்பர் 7ல் முக்கியமான அரசுக்கட்டிடங்கள், குளிர்கால அரண்மனை, பிரதம மந்திரியின் தலைமை அலுவலகங்கள் ஆகியவை புரட்சியாளர்களால் கைப்பற்றப்பட்டன.

**புதிய கம்யூனிஸ்ட் அரசு :**

- 1917 நவம்பர் 8ல் ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது. போல்ஷ்விக் கட்சிக்கு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எனப் புதுப்பெயரிடப்பட்டது.

**4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.** **PTA - 4**

- போர்களைத் தவிர்த்து **உலகில் அமைதியை நிலை நாட்டுவது** பன்னாட்டு சங்கத்தின் முக்கியப் பணியாகும்.
- சமூகப் பொருளாதார விசயங்களில் **பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.**
- பன்னாட்டுச் சங்கம் 1920 - 1925 ஆண்டுகளுக்கிடையே **மூன்று** பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் வெற்றி பெற்றது.

**ஆலேண்டு தீவுகள் பிரச்சனை :**

- **1920ல்** பின்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக் கடற்கரைக்கும் இடையில் அமைந்த **ஆலேண்டு தீவுகள்** உரிமை விவகாரத்தில் **பின்லாந்துக்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனை** ஏற்பட்டது. பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகள் **பின்லாந்துக்கே உரியது** என தீர்ப்பளித்தது.

**மேலை சைலேஷியாபிரச்சனை :**

- **1921ல் போலந்துக்கும் ஜெர்மனிக்கும்** இடையே மேலை சைலேஷியா பகுதியில் எல்லைப் பிரச்சனை ஏற்பட்டது. அப்பிரச்சனையை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.

**கிரீஸ் - பல்கேரிய பிரச்சனை :**

- **கிரீஸ் பல்கேரியாவின்** மீது படையெடுத்த போது பன்னாட்டுச் சங்கம் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது. விசாரணைக்குப்பின் சங்கம் கிரீஸின் மீது குற்றம் சாட்டி, கிரீஸ் போர் இழப்பீடு வழங்க வேண்டுமெனத் தீர்மானித்தது.
- இவ்வாறு 1925இல் லொக்கர்னோ உடன்படிக்கை ஏற்படும்வரை பன்னாட்டுச்சங்கம் வெற்றிகரமாக செயல்பட்டது.

## VII. செயல்பாடுகள் (மாணவர்களுக்கானது)

1. முதல் உலகப்போரில் ஈடுபட்ட நாடுகளின் தலைநகரங்களையும் போர்க்களங்களையும் வரைபடத்தில் குறிப்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

## VIII. வரைபடப் பணி

**உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளைக் குறிக்கவும்.**

| | | | |
|---|---|---|---|
| 1. கிரேட் பிரிட்டன் | 2. ஜெர்மனி | 3. பிரான்ஸ் | 4. இத்தாலி |
| 5. மொராக்கோ | 6. துருக்கி | 7. செர்பியா | 8. பாஸ்னியா |
| 9. கிரீஸ் | 10. ஆஸ்திரிய - ஹங்கேரி | 11. பல்கேரியா | 12. ருமேனியா |

**(வரைபட பயிற்சி புத்தகத்தைப் பார்க்கவும்)**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி II - GMQ, PTA, அரசு தேர்வு வினா விடைகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. ஜூட்லேண்டு போரில் வெற்றி பெற்ற நாடு** **QY - 2019**

அ) ஜெர்மனி ஆ) இங்கிலாந்து
இ) ரஷ்யா ஈ) பிரான்ஸ்

**விடை: ஆ) இங்கிலாந்து**

**2. இத்தாலியப் படை எத்தியோப்பியப் படையால் தோற்கடிக்கப்பட்ட இடம்.** **செப் -2020**

அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு
இ) அடோவா ஈ) அல்ஜியர்ஸ்

**விடை: இ) அடோவா**

### II. சுருக்கமாக விடையளிக்கவும்

**1. வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் ஏதேனும் இரு சரத்துக்களை எழுதுக.** **PTA - 6**

- ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படையொன்றை மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.

**2. ரஷ்யப்புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக் காட்டுக** **செப் -2020**

- பல நாடுகளில் **கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டன.**
- ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளை **விடுதலைக்காக போராட ஊக்குவித்து**, முழுமையாக ஆதரவையும் நல்கியது.
- நிலச் சீர்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம் போன்ற இன்றியமையாதவை குறித்த விவாதங்கள் உலக அளவில் நடைபெறத் தொடங்கின.

### III. விரிவான விடையளிக்கவும்

**1. பன்னாட்டுச் சங்கத்தின் அமைப்பு மற்றும் உறுப்புகள் பற்றி விவரிக்கவும்.** **மே -2022**

- பன்னாட்டுச் சங்கத்திற்கான கூட்டு ஒப்பந்த ஆவணம் பாரிஸ் மாநாட்டில் தயார் செய்யப்பட்டது.
- இச்சங்கம் 1920 இல் துவக்கப்பட்டது.
- இச்சங்கம் தோற்றுவிப்பதில் உட்ரோ வில்சன் முக்கியப் பங்குவகித்தார்.
- பொதுச்சபை, செயற்குழு, செயலகம், பன்னாட்டு நீதி மன்றம் மற்றும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு ஆகியவை இதன் ஐந்து உறுப்புகளாகும்.

**பொதுச்சபை :**

பொதுச்சபையில் ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

**செயற்குழு:**

- செயற்குழுவே முடிவுகளைச் செயல்படுத்தும் அமைப்பு ஆகும்.
- பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் இச்சபையின் தொடக்க கால நிரந்தர உறுப்பினர்களாவர்
- ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒருவாக்கு அளிக்கும் உரிமை உண்டு
- அனைத்து முடிவுகளும் ஒரு மனதாகத் தீர்மானிக்கப் படவேண்டும்.

**செயலகம் :**

- பன்னாட்டுச் சங்கத்தின் செயலகம் ஜெனிவாவில் அமைந்து இருந்தது.
- செயலகப் பணியாளர்களை பொதுச்செயலாளர் பணியமர்த்துவார்.

**பன்னாட்டு நீதிமன்றம் :**


- இந்நீதிமன்றம் தி ஹேக் நகரில் அமைக்கப்பட்டிருந்தது.
- இந்நீதிமன்றம் பதினைந்து நீதிபதிகளைக் கொண்டிருந்தது.

**பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு**

- இவ்வமைப்பு ஒரு செயலகத்தையும், அதன் பொதுமாநாடு ஒவ்வொரு உறுப்பு நாட்டிலிருந்தும் நான்கு உறுப்பினர்களையும் கொண்டிருந்தது.

### III. காலக்கோடு

**1910 முதல் 1930 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.** **செப் -2021** **QY - 2019** **ஏப்ரல்-2023**






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# மெல்ல கற்கும் மாணவர்களுக்கான பகுதி (Slow Learners)

## அலகு 1 . முதல் உலகப் போரின் வெடிப்பும் அதன் பின் விளைவுகளும்

### 2 மதிப்பெண் வினா - விடைகள்

**1. சீன - ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**

➢ 1894 - 1895ல் நடைபெற்ற சீன - ஜப்பானியப்போரில் சீனாவை சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது உலகை வியக்க வைத்தது.
➢ ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது.
➢ இதனால் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த நாடு என நிரூபித்தது.

**2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

➢ இங்கிலாந்து - பிரான்ஸ் - ரஷ்யா

**3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?**

➢ இங்கிலாந்து - கண்மூடித்தனமான நாட்டுப்பற்று
➢ பிரான்ஸ் - அதி தீவிரப்பற்று
➢ ஜெர்மனி - ஜெர்மானிய கலாச்சாரம் உயர்வு

**4. பதுங்கு குழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**

➢ போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்கு குழிகள்.
➢ வீரர்கள் தங்களை பாதுகாக்க தோண்டியவை.
➢ பதுங்கு குழிகள் ஒன்றோடொன்று இணைந்து இருக்கும்.
➢ உணவு மற்றும் ஆயுதங்கள் இவற்றின் வழியாகக் கொண்டு செல்லப்பட்டன.

**5. முஸ்தபா கமால் பாட்சா வகித்த பாத்திரமென்ன?**

➢ துருக்கியை மீண்டும் மறுபிறவி எடுக்கச் செய்தார்.
➢ துருக்கிக்கு விடுதலை பெற்றுத் தந்தார்.
➢ துருக்கியை நவீனமாக்கினார்.
➢ அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்து மாற்றியமைத்தார்.

**6. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.**

➢ சங்கத்திற்கு பொதுவான ராணுவம் இல்லை.
➢ இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி சங்கத்தின் ஆணைக்கு கட்டுப்பட மறுத்தது.
➢ கூட்டுப்பாதுகாப்பு நடைமுறைப்படுத்த முடியவில்லை.

### 5 மதிப்பெண் வினா - விடைகள்

**1. முதல் உலகப் போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.**

➢ ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிர் அணி சேர்க்கைகளும்.
➢ ஜெர்மனி, ஆஸ்திரியா – ஹங்கேரி, இத்தாலி – மைய நாடுகள்.
➢ இங்கிலாந்து, பிரான்ஸ் – ரஷ்யா – மூவர் கூட்டு – நேச நாடுகள் .
➢ வன்முறை சார்ந்த தேசியம்.
➢ ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை.
➢ பிரான்ஸ் – ஜெர்மனி பகை.
➢ பால்கன் பிரச்சனை.
➢ உடனடிக் காரணம் – ஆஸ்திரிய இளவரசர் படுகொலை.

**2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களைக் கோடிட்டுக் காட்டுக.**

➢ ஜெர்மனி போர் இழப்பீட்டு தொகை வழங்குதல்.
➢ ஜெர்மனியின் படைக்குறைப்பு.
➢ ஆஸ்திரியா மற்றும் ஜெர்மனி ஒருங்கிணைப்புக்குத் தடை .
➢ ஜெர்மனி கடல் கடந்த காலனிகளை விட்டுக் கொடுத்தல்.
➢ அல்சேஸ் – லொரைன் பகுதிகளை பிரான்சுக்கு விட்டுக் கொடுத்தல்.
➢ ரஷ்யாவுடன் செய்த பிரெஸ்ட் – லிடோவஸ்க் மற்றும் பல்கேரியாவுடன் செய்த புகாரெஸ்ட் உடன்படிக்கைகள் ரத்து.
➢ ஜெர்மனியின் டான்சிக் துறைமுகம் பன்னாட்டு சங்கத்தின் நிர்வாகத்தில் விடப்பட்டது.

**3. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கினை விளக்குக.**

➢ சோவியத்துகளில் மென்ஸ்விக்குகள் ஆதிக்கம் செலுத்த, சிறுபான்மையினராக இருந்த போல்ஷ்விக்குகள் அச்சமுற்றவர்களாக இருந்தனர்.
➢ லெனின் வருகையால் இச்சூழல் மாறியது.
➢ லெனின் முழக்கம் – அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே.
➢ லெனின் முழக்கம் – ரொட்டி, அமைதி, நிலம்.
➢ தற்காலிக அரசின் தவறுகள்.
➢ பிராவ்தா தடை செய்யப்பட்டது.
➢ போல்ஸ்விக்குகள் கைது செய்யப்பட்டனர்.
➢ டிராட்ஸ்கியும் கைது செய்யப்பட்டார்.
➢ லெனின் தலைமையில் போல்ஸ்விக் ரஷ்யாவில் ஆட்சி அமைத்தது.
➢ போல்ஸ்விக் கட்சி ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி என அழைக்கப்பட்டது.

**4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.**

➢ 1920-1925 ஆண்டுகளுக்கிடையே பன்னாட்டு சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்து வைக்க அழைக்கப்பட்டது. சங்கம் மூன்று பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தது.
➢ 1920ல் ஸ்வீடன் மற்றும் பின்லாந்திற்கிடையே ஆலேண்டு தீவுகள் சம்மந்தப்பட்ட பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.
➢ போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே சைலேஷியா பகுதியில் ஏற்பட்ட எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.
கிரீஸ் மற்றும் பல்கேரியா நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.
➢ இவ்வாறு 1925ல் லொக்கர்னோ உடன்படிக்கை ஏற்படும் வரை பன்னாட்டு சங்கம் வெற்றிகரமாகச் செயல்பட்டது.



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# அரசு பொதுத் தேர்வு - ஏப்ரல் 2023

| கால அளவு : 3.00 மணி நேரம் | சமூக அறிவியல் | மொத்த மதிப்பெண்கள் : 100 |
|---|---|---|

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறைபாடு இருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு : இவ்வினாத்தாள் நான்கு பகுதிகளைக் கொண்டது.**

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **14×1=14**

(ii) **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**1.** உலகத்தின் எந்தப் பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?
அ) ஐரோப்பா ஆ) <u>இலத்தீன் அமெரிக்கா</u>
இ) இந்தியா ஈ) சீனா

**2.** சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது?
அ) செப்டம்பர் 1959 ஆ) <u>செப்டம்பர் 1949</u> இ) செப்டம்பர் 1954 ஈ) செப்டம்பர் 1944

**3.** கிழக்கிந்திய கம்பெனியின் நாடு பிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்?
அ) மருது சகோதரர்கள் ஆ) <u>பூலித்தேவர்</u>
இ) வேலுநாச்சியார் ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன்

**4.** இந்திய தேசிய காங்கிரசின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது?
அ) பம்பாய் ஆ) மதராஸ் இ) <u>கல்கத்தா</u> ஈ) நாக்பூர்

**5.** பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?
அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பர்லின் இ) <u>உட்ரோ வில்சன்</u> ஈ) பால்டுவின்

**6.** ஆந்த்ரசைட் நிலக்கரி .................... கார்பன் அளவை கொண்டுள்ளது.
அ) <u>80%-90%</u> ஆ) 75%-க்கு மேல் இ) 60%-70% ஈ) 50%-க்கும் குறைவு

**7.** தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் .................
அ) ஆனைமுடி ஆ) <u>தொட்டபெட்டா</u> இ) மகேந்திரகிரி ஈ) சேர்வராயன்

**8.** தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை
அ) <u>3 மற்றும் 15</u> ஆ) 4 மற்றும் 16 இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15

**9.** பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ....................
அ) பாபர் ஆ) தராய் இ) <u>பாங்கர்</u> ஈ) காதர்

**10.** கம்பு ............................ -ஐ பூர்விகமாகக் கொண்ட பயிராகும்.
அ) ஆசியா ஆ) இந்தியா இ) <u>ஆப்பிரிக்கா</u> ஈ) ரஷ்யா

**11.** கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசு தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?
அ) சட்டப்பிரிவு 352 ஆ) <u>சட்டப்பிரிவு 360</u> இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**12.** பின்வருவனவற்றைக் காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
(i) பஞ்சசீலம்
(ii) சீனாவின் அணு வெடிப்புச் சோதனை
(iii) 20 ஆண்டுகள் ஒப்பந்தம்
(iv) இந்தியாவின் முதல் அணு வெடிப்புச் சோதனை
அ) (i), (iii), (iv), (ii) ஆ) (i), (ii), (iii), (iv) இ) (i), (ii), (iv), (iii) ஈ) (i), (iii), (ii), (iv)

**13.** ................ இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.
அ) நீலப் புரட்சி ஆ) வெள்ளைப் புரட்சி இ) பசுமைப் புரட்சி ஈ) சாம்பல் புரட்சி

**14.** பின்வருவனவற்றுள் தோல் தொழிற்சாலைகள் இல்லாதது எது?
அ) ராணிப்பேட்டை ஆ) தர்மபுரி இ) ஆம்பூர் ஈ) வாணியம்பாடி

## பகுதி - II

**குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **10×2=20**

15. ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்? **வர - 3**
16. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணி வகுப்பின் விளைவுகள் யாவை? **வர - 2**
17. இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து குறிப்பு வரைக. **வர - 5**
18. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை தொகுத்து வழங்கவும். **வர -7**
19. பதுங்கு குழி போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன? **வர - 1**
20. பேரிடர் அபாய நேர்வு - வரையறுக்கவும். **புவி - 6**
21. பன்னாட்டு வணிகம் - வரையறுக்கவும். **புவி - 5**
22. கோயம்புத்தூர் ஏன் தமிழ்நாட்டின் “மான்செஸ்டர்” என அழைக்கப்படுகிறது? **புவி - 7**
23. இயற்கை எரிவாயு என்றால் என்ன? **புவி - 4**
24. வெப்ப குறைவு விகிதம் என்றால் என்ன? **புவி - 2**
25. இந்தியாவின் செம்மொழிகள் யாவை? **குடி - 1**
26. பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக. **குடி - 5**
27. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன? **பொ - 1**
28. விகித வரி விதிப்பு முறை என்றால் என்ன? **பொ - 4**

## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக : **10×5=50**
(i) டானென்பர்க் போரில் ----------- பேரிழப்புகளுக்கு உள்ளானது. **வர - 1**
(ii) சாத்தனூர் அணை ----------- ஆற்றில் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. **புவி - 7**
(iii) ----------- தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும். **புவி - 6**
(iv) இந்தியா அரசியலமைப்பு ----------- அரசாங்கத்தை வழங்குகிறது. **குடி - 3**
(v) ----------- ஆம் ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. **பொ - 3**
30. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க. **வர - 3**
31. வேலூரில் 1806-ல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக. **வர - 6**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



32. (அ) வேறுபடுத்துக :
    (i) மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள் **புவி - 1**
    (ii) உலோகம் மற்றும் அலோக கனிமங்கள் **புவி - 4**

(ஆ) காரணம் கூறுக.
    கிழக்கு தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது. **புவி - 6**

33. சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பங்கினை விவரிக்கவும். **வர - 9**

34. தென்மேற்கு பருவக் காற்று குறித்து எழுதுக. **புவி - 2**

35. இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரிக்கவும். **புவி - 3**

36. இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி எழுதுக. **புவி - 5**

37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக. **குடி - 1**

38. இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை? **குடி - 2**

39. பொது விநியோக முறையை விவரிக்கவும். **பொ - 3**

40. MNC வளர்ச்சிக்கான காரணங்களை விவரிக்கவும். **பொ - 2**

**குறிப்பு :** பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றை பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக. **வர - 1**
    1910 முதல் 1930 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.

42. உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.
    (i) கிரேட் பிரிட்டன் (ii) பிரான்ஸ் (iii) இத்தாலி (iv) ஜெர்மனி (iv) மொராக்கோ

## பகுதி - IV

**குறிப்பு : பின்வரும் வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2×8=16**

43. (அ) தீபகற்ப பீடபூமிகள் பற்றி விவரிக்கவும் **புவி -1**

**(அல்லது)**

(ஆ) 1857 பெருங்கலகம் தோல்வியடைய காரணங்களை ஆராய்க. **வர - 7**

**குறிப்பு :** பார்வையற்ற மாணவர்கள் வரைபட தொடர்புடைய வினாக்களுக்கு குறிப்புகள் மட்டும் எழுதவும்.

44. (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.
    (i) ஆரவல்லி (ii) நர்மதை (iii) தக்காண பீடபூமி
    (iv) பன்னா உயிர்கோள பெட்டகம் (v) தார் பாலைவனம் (vi) மேற்கு தொடர்ச்சி மலைகள்
    (vii) பாரதீப் (viii) கரிசல்மண் பகுதி ஒன்று

**(அல்லது)**

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
    (i) பாலாறு (ii) வேடந்தாங்கல் (iii) காபி விளையும் பகுதி
    (iv) முல்லை பெரியார் அணை (v) பட்டு தொழில் நடைபெறும் இடம் (vi) எண்ணூர்
    (vii) விமான நிலையம் (ஏதேனும் ஒன்று) (viii) இந்தியப் பெருங்கடல்

*****



Kindly send me your study materials to padasalai.net@gmail.com